ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர் மாயாவி தோன்றும்
மாய முத்திரை
ரூ. 3

அதிர்ஷ்ட போன்

போனில் உங்கள் அதிர்ஷ்டம் அடுத்த
வாரம் என்ன நடக்கும் என அறிந்திடலாம் போனில்
உங்களுக்கு கிடைத்திடும் எல்லாம்

☎ 0011 222 222 0+

31 மேஷம்	**32** ரிஷபம்	**33** மிதுனம்	**34** கடகம்	**35** சிம்மம்	**36** கன்னி
37 துலாம்	**38** விருச்சிகம்	**39** தனுசு	**40** மகரம்	**41** கும்பம்	**42** மீனம்

மன ஜோதிடம்

உங்கள்
வருங்கால
ரகசியங்களை
அறிந்திருங்கள்



0011 222 222 030

பட்சி சாஸ்திரம்

ஒரு பண்டைய
ஆரூட முறை. உங்கள் குறிப்பிட்ட
கேள்விகளுக்கு பதில் சொல்கிறது.

☎ 0011 222 222 025

உற்றாரும்-உறவினரும்

நண்பர்கள், உறவினர்கள், உடன்வேலை
செய்வோர் மற்றும் வாழ்க்கைதுணை
யாராயிருப்பினும் போனில் தெரிந்து
கொள்ளலாம் அவர்களுக்கும் உங்களுக்கும்
எத்தனை பொருத்தம் என்று.

☎ 0011 222 222 047

இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ, யு.எஸ்.ஏ.

ராணி காமிக்ஸ் - 266 ஜூலை 16 — 31
(மாதம் இருமுறை இதழ்) 1995



பெங்காலியாவின் அடர்ந்த காட்டுக்குள் எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. அவற்றில் மிக முக்கியமானது மாயாவியின் கைகளில் அணிந்திருக்கும் மோதிரங்கள். வலக் கையில் மண்டை ஓட்டு மோதிரம். இடக்கையில் வாட்கள் குறுக்காக இருப்பது போன்ற மோதிரம். இந்த இரண்டு மோதிரங்களைப் பற்றியக் கதைதான், இது. இனி கதைக்கு வாருங்கள்.

மாயாவியின் பரம்பரை 21 தலைமுறையாக வன்முறையை அடக்குவதிலேயேதான் குறியாக இருந்து வருகிறது.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மாயாவி ஒருநாள் காயத்தோடு குதிரையில் சாய்ந்தபடி மண்டை ஓட்டுக் குகைக்கு வந்தார்.

மாயாவி முடியாமல் படுத்துவிட்ட செய்தி கேட்டு காட்டு மக்கள் துயரத்தோடு இருந்தார்கள்.

மரணத்தின் பிடியில் இருந்த மாயாவி கையில் அணிந்திருந்த இரண்டு மோதிரங்களையும் கழற்றி மகனிடம் கொடுத்தார்.



மோதிரத்தை மகனிடம் ஒப்படைத்துவிட்டு உயிரை விட்டார்.

உடனே மகன் தந்தையை குகைக்குள்ளே புதைத்து வைக்க ஏற்பாடு செய்தான். மாயாவியின் முன்னோர்கள் எல்லாம் இந்தக் குகைக்குள்தான் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.


அடக்கம் முடிந்தபின் மகன் தன் அப்பாவின் உடையை எடுத்து அணிந்துகொண்டான்.
அட.... என் உருவம் அப்பாவைப் போலவே இருக்கிறதே!

புதிய மாயாவியின் வருகையால் காட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைத்துப் போனார்கள்.
மாயாவி வாழ்க!
இப்படித்தான் ாயாவியின் பரம்பரை தொடர்ந்து கொண்ம ருக்கிறது.


மாயாவியின் முத்திரைபதித்த மோதிரம் ஒவ்வொன்றுக்கும் கதைகள் உண்டு.
தாடையில் என்ன இது?
மண்டை ஓட்டுக் குறி போல இருக்கிறதே?
எதிரிகளுக்கு மாயாவி தரும் அடையாளம்தான் இந்த மண்டை ஓட்டு முத்திரை.


இது பாதுகாப்பை குறிக்கும் முத்திரை. இதில் இரண்டு வாள் குறுக்காக இருப்பது போல் இருக்கும்.
ஆகா... மருத்துவமனை! இங்கே கொள்ளையடித்தால் ந்றைய பணமும், மருந்தும் கிடைக்கும்!
மருத்துவர் ஆக்சல் மருத்துவமனை
ஏய்... அங்கே பார். மாயாவியின் பாதுகாப்பு முத்திரை இருக்கிறது!


காலங்காலமாக இந்த இரண்டு முத்திரை மோதிரங்களும் பல வகை களில் பயன்பட்டு வந்தன.
ஒன்று அச்சத்தை ஏற்படுத்தும். இன்னொன்று அன்பைக் காட்டும்.


மாயாவியின் வலக்கையில் மண்டை ஓட்டு முத்திரை மோதிரம் அணிந்திருப்பார்.
கும்...!
ஆ...!

மாயாவியின் முத்திரையை என்றுமே அழிக்க முடியாது.
இது அழியவே அழியாது போலிருக்கிறது!

சில நேரங்களில் மாயாவி இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்ட வேளைகளில், யாராவது உதவினால் மாயாவி அவர்களை மறக்க மாட்டார்.
?!
!!

நீ என்னை காப்பாற்றி
இருக்கிறாய். இந்த
முத்திரையினால் உன் பரம்பரை
முழுக்க பயமே இல்லாமல்
வாழலாம்! என் பாதுகாப்பு
எப்பொழுதும்
உண்டு.

மாயாவியை காப்பாற்றியவரின் வாரிசுகள் எல்லாம் இந்த முத்திரை
யை அணிந்து வந்தார்கள்.
செயினில் உள்ள டாலர்
அழகாக இருக்கிறதே! இது
என்ன முத்திரை?
தெரியவில்லை!
எங்கள் குடும்பத்தின்
அதிருஷ்ட டாலர் இது!
தாத்தா காலத்தில் இருந்தே
இந்த முத்திரை எங்களிடம்
இருக்கிறது!

என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய்! உன் பரம்பரைக்கு இந்த மாயாவியின் பாதுகாப்பு என்றைக்கும் உண்டு!
மாயாவி இடக்கை விரலில் அணிந்திருக்கும் மோதிரம் நன்மையைக் குறிக்கும் அடையாளச் சின்னம்.
இந்த முத்திரை இருந்தால் மாயாவியின் பாதுகாப்பா? எப்படி? யார் இந்த முகமூடி மனிதர்! இது அதிருஷ்டத்தை தரும் என்றாரே...?


காட்டுக்குள் கொள்ளையர்களிடத்தில் சிக்கியிருந்த ஒரு முகமூடி மனிதனை காப்பாற்றினேன்!
காட்டுக்குள் நடந்ததை விளக்கமாக சொல்லிக்கொண்டிருந்தான், கிரண்.

அன்றையில் இருந்து எனக்கு அதிருஷ்டம் அடிக்கத் தொடங்கியது. என் மனைவி, மக்கள் எல்லாம் இந்த அதிருஷ்டத்தினால் கிடைத்தவைதான்!


இந்த முத்திரையின் பொருள் என்ன?
ஏதோ முகமூடி மனிதன் சம்பந்தப் பட்டது. எனக்கு சரியாக நினைவில்லை!
கிரண் பரம்பரையினர் அந்த முத்திரையின் கதை தெரியாமலே அதை அணிந்து வந்தார்கள்.

ஒருநாள் கிரணின் பேரன் ஒருவன் தேனிலவுக்காக நகர ஓட்டலுக்கு வந்திருந்தான்.
டார்லிங்! இது என்ன மோதிரம்?
இதன் பொருள் எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் பரம்பரையினர் இதனை தொடர்ந்து அணிந்து வருகிறோம்! இது அதிருஷ்டமானது!
இருவர் அவர்களை நோட்டமிட்டார்கள்.

ஓட்டல் அறையில்—
டார்லிங்! நகைகளை ஓட்டல்காரர்களின் பாதுகாப்பில் கொடுப்போமா?
வேண்டாம்! நாம்தான் குளித்துவிட்டு உடனே திரும்பிவிடுவோமே.


இருவரும் குளிக்க வெளியே சென்றதும், இரண்டு மர்ம ஆசாமிகள் அங்கே வந்தார்கள்.
அங்கே பார்த்தாயா, நகைப் பெட்டியை இவர்கள் பெரும் பணக்காரர்களாகத் தெரிகிறார்கள்!
நகைப் பெட்டியை அபேஸ் செய்து விடலாமா?


நகையை அறையில் மேசையிலேயே விட்டு வந்துவிட்டேன். அறையை நன்றாக பூட்டிவிட்டீர்கள் அல்லவா?
சன்னலைக்கூட பூட்டிவிட்டேன்! ஓட்டலில் திருட்டு எல்லாம் நடக்காது. கவலைப்படாதே.

ஓட்டலில்—
ஏய்...! அவர்கள் வரும்முன் வேலையை முடிக்க வேண்டும்!
படீர்...
கவலைப்படாதே! ஒரு நொடியில் முடித்துவிடு கிறேன்!


நீ வெளியே இருந்து யாராவது வருகிறார்களா என்று பார்த்துக்கொள்!
ஓ.கே...!
ஒருவன் மட்டும் உள்ளே நுழைந்தான்.

உள்ளே போனவன் நகைகளைப் பார்த்து திகைத்துப் போனான்.
அடேயப்பா.... ஒரு பெட்டி நிறைய நகைகள் இருக்கின்றதே! பெரிய பணக்காரர்கள் போலிருக்கிறது!
ஏய்... பிரமித்தது போதும். விரைவாக தூக்கிக்கொண்டு வா!

ஏய்... சாம்!
அவர்கள் வருகிறார்கள்.
சீக்கிரம்
வெளியே வா!
!!

அதற்குள் அந்த இரண்டு மர்ம மனிதர்களும் நகைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தார்கள். எதிரில் புதுமணத் தம்பதிகள் வந்தார்கள்.
அலோ...! புதுமணத் தம்பதிகளா?
ஆமாம்...!
இங்கு மனிதர்கள் எவ்வளவு அன்பாக பழகுகிறார்கள்!


அறைக்குள் நுழைந்தவள் நகைப் பெட்டி காணாமல் போனதைப் பார்த்து அலறினாள்.
அய்யோ...! என் நகைகள் களவு போய்விட்டதே! நான் இப்பொழுது என்ன செய்வேன்?

மர்ம ஆசாமிகள் கொள்ளையடித்த நகைகளை பங்கு போட்டார்கள்.
டாம்! இங்கே பார்த்தாயா? வைரம், வைடூரியம், இந்தமோதிரம்தான் எதற்கும் பயன்படாது. இதை நீயே வைத்துக்கொள்!
ஒன்றுக்கும் உதவாத மோதிரத்தை கொடுத்து என்னை ஏமாற்றாதே!
மோதிரத்தில் மாயாவியின் பாதுகாப்பு முத்திரை பதிக்கப்பட்டு இருந்தது.


ஓட்டலில்—
சார்! அறை மேசையில் வைத்துவிட்டுப் போன எங்கள் நகைகளை காணவில்லை!
மன்னிக்க வேண்டும்! அறையில் விட்டுச் செல்லும் பொருளுக்கு நாங்கள் பொறுப்பல்ல!

போலீசில் புகார் செய்தார்கள்.
நாங்கள் குளித்துவிட்டு வரும்போது எதிரில் இருவரைப் பார்த்தோம். அவர்கள் ஓட்டலில் தங்க வந்தவர்கள்
மாதிரித் தெரிய வில்லை!
அவர்கள் அடையாளங்களைக் கூறுங்கள்!

டாமின் முகத்தில் ஓங்கி குத்தினான்.

நகை அத்தனையும் எனக்குத்தான். உனக்கு வேண்டுமானால் இந்த மோதிரத்தை வைத்துக்கொள்!

டாமிடம் மோதிரத்தை வீசிவிட்டு அவன் புறப்பட்டான்.
டேய்...! ஒன்றுக்கும் உதவாத மோதிரத்தை வீசிவிட்டா செல்கிறாய்? உன்னை சும்மா விடமாட்டேன்!

சார்! நான் சொன்ன ஆள் இவன்தான்!
ஏய்... நில்!
!
ஆகா...! என் நகைகள் எல்லாம் கிடைத்துவிட்டன!
ஆமாம்! என் மோதிரத்தை மட்டும் காணவில்லையே?
நல்லவேளை! நான் தப்பித்தேன்!
டாமின் அதிருஷ்டத்தால் போலீசில் இருந்து தப்பித்தான்.

ஏய்... சாம்! உன்னுடன் இருந்தவன் யார்? அவன் பெயர் என்ன?
POLICE
அதைச் சொல்ல மாட்டேன்!
நல்லவேளை! சாம் என்னைக் காட்டிக் கொடுககாதது என் அதிருஷ்டம்தான்!

சாம் இந்த மோதிரத்தை செல்லாக்காசு என்று தூக்கி எறிந்தான்! இதுவா செல்லாக்காசு? இதில்தான் அதிருஷ்டமே இருக்கிறது!

அதேநேரம்— காட்டுக்குள் இருந்த மாயாவி வெளியே புறப்பட்டார்.



டாம் வெளியில் சுற்றித் திரிந்தான்.
சார்! அடையாளம் ஏறக்குறைய இவனை ஒத்து வருகிறதே! ஏய்... நில்!
ஆ... போலீஸ்!
!
எங்களுடன் ஸ்டேசனுககு வா! உன்னை விசாரிக்க வேண்டும்!
சாம் என்பவனை உனக்குத் தெரியுமா?
யார்... சார்...! சாமா...? யார் சார் அது!


எனக்கு அப்படி யாரும் நண்பர்கள் இல்லையே. நான் அப்பாவி சார்!
அப்படித்தான் முதலில் சொல்வாகள். ஏய்... இவன் மோதிரத்தை பார்!
ஆ...! பாதுகாப்பு முத்திரை
மோதிரத்தைப் பார்த்ததும் போலீசார் உஷாரானார்கள்.

நிச்சயமாக இவருடைய நண்பர் திருடனாக இருக்க முடியாது!
தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும் சார்!
அட... என்னடா இது...!

சாமின் சகோதரர்கள் ஸ்டேசனுக்கு வந்தார்கள்.
சாம்...! உன்னை எப்படி போலீசார் பிடித்தார்கள்?
எல்லாம் அந்த டாமின் வேலைதான். அவனை சும்மா விடாதீர்கள்!

டாம் மதுபானக் கடையில் இருந்தான்.
சாமும் அவனது சகோதரர்களும் உன்னைத்தான் சந்தேகிக்கிறார்கள்! அவர்கள் உன்னை தீர்த்துக்கட்ட முடிவு செய்திருக்கிறார்கள்!
நான் அப்படிப்பட்ட துரோகி அல்ல!


டாம் மட்டும் என் கையில் கிடைக்கட்டும். அவனை வெட்டிச் சாய்க்கிறேன்!
துரோகி...!
பேசாமல் நகரை விட்டு ஓடிவிட வேண்டியதுதான்!


எட்வின்! என்னை நம்பி எனக்கு ஒரு நல்ல குதிரை கொடு!
என்னை ஏமாற்றி குதிரையை அபேஸ் பண்ணப் பார்க்கிறாயா?


எட்வின்! என்னைக் காப்பாற்று! என் உயிர் உன் கையில்தான் இருக்கிறது!
உன்னை நான் எப்படி நம்புவது? ஆ... மோதிரம்...?
குதிரைதானே வேண்டும். தாராளமாக எடுத்துக்கொள்!


டாம் குதிரையில் ஏறி காட்டுக்குள் விரைந்தான்.
மோதிரத்தைப் பார்த்ததும் எட்வின் எப்படி மனம் மாறினான்!
இதோ ஒருவன் வருகிறான்!
குதிரை நல்ல வாட்ட சாட்டமாக இருக்கிறது. அவனை பிடியுங்கள்!
காட்டுக்குள் மூன்று பேர் பதுங்கியிருந்தார்கள்!

மூவரும் டாமை வழிமறித்தார்கள்.
பிடி அவனை!
ஏய்... இவன் மோதிரத்தைப் பார்!
பணம் எதுவும் இருக்கிறதா என்று பார்!
ஆ...!

அட... மாயாவியின் பாதுகாப்பு முத்திரை மோதிரம்!
அய்யோ....
??
மூவரும் மோதிரத்தைப் பார்த்ததும் டாமை விட்டுவிட்டு ஓட்டம பிடித்தார்கள்.

டாம் நடந்தவற்றை நினைத்துப் பார்த்தான்.
இவர் நண்பர் திருடனாக இருக்க முடியாது.
ஆ! இந்த மோதிரம்...
நல்ல திடகாத்திரமான குதிரையைத் தருகிறேன்.
இந்த மோதிரத்தை பார்க்கிறவர்கள் எல்லாம் நொடியில் மாறிவிடுகிறார்களே...?
அய்யோ...! மாயாவியின் பாதுகாப்பு முத்திரை மோதிரம்!
என்னைக் கொல்ல வந்தவர்கள் மோதிரத்தைப் பார்த்துவிட்டு தலைதெறிக்க ஓடுகிறார்களே! இந்த மோதிரத்தின் மகிமை தான் என்ன?


டாம் காட்டில் உள்ள காட்டுவாசியின் கிராமத்துக்கு வந்தான்.
இந்த மோதிரத்தின் மகிமை இந்த கிராமத்தில் எப்படி வேலை செய்கிறது என்று பார்ப்போம்!

நண்பர்களே! எனக்கு பசிக்கிறது- சாப்பிட ஏதாவது கொண்டு வாருங்கள்!
!!!
அதை பணிவோடு கேட்டால் என்ன?
ஏய்... அவன் கையில் உள்ள மோதிரத்தைப் பார்!


மோதிரத்தைப் பார்த்ததும் டாமுக்கு உற்சாக வரவேற்பு இருந்தது.
எனக்கு பணிவிடை செய்ய இரண்டு அழகான பெண்களை அனுப்பு!
அவன் கேட்பதைக் கொடுங்கள் அவன் மாயாவியின் நண்பராயிற்றே!

ஆகா! என்ன அழகு! இப்படி அருகில் வாருங்கள்!

அதேநேரம்— ஈடன் தீவில் இருந்த மாயாவி மிருகங்களுடன் உற்சாக மாய் விளையாடி பொழுதைக் கழித்துக்கொண்டு இருந்தார்.




கிராமத்தில்—
கறித்துண்டு இருக்கிறதா?
உங்களது கட்டளைகளை நிறைவேற்ற காத்திருக்கிறோம். நீங்கள் எங்களுக்கு வேண்டியவரின் நண்பராயிற்றே!

உங்களுக்கு வேண்டியவரின் நண்பரா? யார் இவர்களுக்கு வேண்டியவர்? இந்த மோதிரத்துககும் அவனுக்கும் என்ன சம்பந்தம்!


ஈடனில் மாயாவி வெகு உற்சாகமாய் இருந்தார்.
வேகம் போதாது!

நமக்கு இங்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்று பார்க்க இவர்களிடம் தங்கம் கேட்டுப் பார்க்கலாம்.
கறியா இது? சரியாக வேகவில்லை!
மன்னியுங்கள்! உங்கள் விருப்பம் போல் செய்து தர காத்திருக்கிறோம்!

தலைவரே! தங்கம் ஒரு மூட்டை கொண்டுவரச் சொல்!
இவனை சும்மா விடக்கூடாது!
உஷ்... உஷ்...! இவன் கையில் மோதிரத்தை பார்! மாயாவியின் நண்பர் இவர்!

இதுபோதும். நான் கிளம்புகிறேன்!
என் அதிருஷ்டத்தை இன்னொருமுறை சோதித்துப் பார்த்தால் என்ன?
சளங்...!
சளங்...!
அப்பாடி....! ஒருவழியாய் ஆள் புறப்பட்டுவிட்டான்!

ஏய்... பெண்ணே...!
நீயும் என்னுடன் வா...!
ஆ...!
டேய்...
அவள் என்
சகோதரி...!

உன் வரம்பு எல்லை
மீறிப்போகிறது! உன்னை
கொல்லாமல் விட
மாட்டேன்!
!
ஏய்..! சும்மா
விளையாட்டுக்கு
சொன்னேன்!

ஏய்...! இன்னொரு முறை என் சகோதரியை அவமானப்படுத்தினாய்...!
இல்லை! இனி அப்படிப் பேசமாட்டேன்! என்னை மன்னித்துவிடு!
அவரை விட்டுவிடுங்கள்! மன்னிப்பு கேட்டு விட்டார் அல்லவா?
ஏய்... அவர் மாயாவியின் பாது காப்பு முத்திரையை பெற்று இருக்கிறார்!
இவனா? உண்மையாகவா?

அப்படியானால் நான் கிளம்பட்டுமா?
பொறு! இந்த மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது!

எப்படிக் கிடைக்குமோ அப்படித்தான் எனக்குக் கிடைத்தது!
இந்தக் கதையெல்லாம் என்னிடம் விடாதே! மோதிரத்தை எங்கே திருடினாய்?

முரசுமூலமாக செய்தியை அனுப்பினார்கள்.

முரசுமூலமாக செய்தி நாலாபுறமும் பரவியது.
டம்... டம்...
டம்... டம்
டம்...

ஈடன் தீவில் மாயாவி பால்டியுடன் குத்துச்சண்டை பயிற்சியில் இருந்தபோது முரசுச் செய்தி வந்தது.
மாயாவி! உங்கள் அடையாள முத்திரை அணிந்திருக்கும் மனிதர் உங்கள் நண்பரா?
பால்டி கொஞ்சம் பொறு!

டாம் அடுத்த கிராமத்துக்கு வந்தான்.


இவர் மாயாவியின் முத்திரையை அணிந்திருக்கிறார்!
ஆமா...ம்... எனக்கு கொஞ்சம் பணம் வேண்டும்!
உங்கள் நண்பர் எங்கள் தலைவர் உயிரை காப்பாற்றியிருக்கிறார்!
இதோ... தங்கம், பணம் எல்லாம் இருக்கின்றன. தேவையானதை எடுத்துக்கொள்ளுங்கள்!

இவைகளை எடுத்துச் செல்ல வண்டி வேண்டும்!
இதோ... வண்டி தயாராகிவிட்டது...!

டாம் கிராமம் கிராமமாக சென்று மோதிரத்தை காட்டி செல்வத்தை திரட்டினான்.


ஆகா...! இனி
நான் ரோம், லண்டன், பாரிசு சென்று அத்தனை இன்பத்தையும் அனுபவிப்பேன்!


மாயாவி குதிரையில் விரைந்து வந்துகொண்டிருந்தார். வழியில் டாமைக் கண்டார்.
இரண்டு வண்டி போதாது. இன்னும் இரண்டு வண்டி கேட்டு பொருள் சேர்க்க வேண்டும்!

டாமின் பேராசை அதிகமாகிக்கொண்டே இருந்தது.



டாம் ஒரு கிராமத்துக்கு வந்தான்.
நீங்கள் ஏற்கனவே இங்கே வந்து தங்கமெல்லாம் வாங்கிச் சென்று விட்டீர்கள்!
தெரியும்! எனக்கு இன்னும் பணம் தேவைப்படுகிறது!
பேராசைக்காரன்!
முட்டாள்...! இவன் எப்படி மாயாவியின் நண்பராக இருக்ச முடியும்!
மாயாவியின் முத்திரை மோதிரம் அணிந்திருக்கிறானே...?


டாம் திரும்பவும் எல்லா கிராமத்திற்குச்
சென்று கிடைத்ததை சுருட்டிக்கொண்டான்.
எனக்கு இன்னொரு வண்டியும் குதிரையும் வேண்டும்!
பணப் பேய் பிடித்து அலைகிறான்!
ராஸ்கல்...!
மாயாவியின் நண்பராயிற்றானே!

கிராம மக்கள் என்னை வெறுத்தாலும் இந்த மோதிரத்துக்காக கேட்டதை எல்லாம் கொடுக்கிறார்கள்!
இது கடைசி கிராமம். இனி நான் கோடீசுவரன்தான்!

திடீரென்று மாயாவி அவன்முன் தோன்றினார்.
யார் இவன்? கொள்ளைக் காரனாக இருக்குமோ? ஏற்கனவே நிறையபேர் இந்த மோதிரத்தை பார்த்து பயந்து ஓடியிருக்கிறார்கள்!

மாயாவி அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினார்.
ஏய்... நீ என்னை ஒன்றும் செய்ய முடியாது. இந்த மோதிரத் தைப் பார்!
காட்டு பார்க்கிறேன்!


ஏய்... இந்த மோதிரம் உனக்கு எங்கே எப்படிக் கிடைத்தது...! வண்டியில் உள்ள பொருட்களை யார் கொடுத்தது
முதலில் கையை எடு. விபரமாக சொல்கிறேன்!

நான் எந்தத் தவறும் செய்யவில்லை! அதை என்னால் நிரூபிக்க முடியும்!
எப்படி நிரூபிப்பாய்...!

அதற்குள் டாம் இடுப்பில் இருந்து, துப்பாக்கியை எடுத்தான்.
கிராம மக்களிடம் நான் எதுவும் கேட்கவில்லை. அவர்களாகவே கொடுத்தார்கள். வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்!

முட்டாளே! என்னிடமா கேள்வி கேட்கிறாய்...! இப்போது என்ன செய்கிறேன் பார்!

டாம் துப்பாக்கியை எடுத்து இயக்கி வெடிக்கச் செய்வதற்குள் மாயாவியின் துப்பாக்கி முந்திக்கொண்டது.
ஆ...!
டுமீல்...!
டேய்...! மரியாதையாக மோதிரம் எங்கே கிடைத்தது என்று சொல்...!
அதற்குள் கிராம மக்கள் கூடினார்கள்.


நான் மோதிரத்தை
விலைக்கு
வாங்கினேன்!
யாரிடம் கதைவிடுகிறாய்...!
இது எனது முத்திரை.
விற்பனைப் பொருள்
இல்லை!

இவன் ஒரு ஏமாற்றுக்காரன்!
என் நண்பன் இல்லை!
அப்படியானால்
இவனைக் கொல்ல
வேண்டும்!


இந்த மோதிரத்தை எங்கோ திருடியிருக்கிறான். இவன் என் நண்பன் இல்லை என்று காடு முழுக்க செய்தியை அனுப்புங்கள்!
நல்லது மாயாவி!

மோதிரம் அணிந்தவன் ஒரு திருடன். மாயாவியின் நண்பர் அல்ல!
அந்தச் செய்தியும் காடு முழுக்க பரவியது.

மோதிரம் அணிந்தவன் ஒரு
திருடன். மாயாவியின்
நண்பர் அல்ல!
என் நண்பன் என்று சொல்லி கொள்ளையடித்த பொருட்களை உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்!
முகமூடியெல்லாம் அணிந்து திருடன் போல இருக்கிறான். ஆனால், நேர்மையானவன் போல பேசுகிறான்!


மாயாவி கிராமத் தலைவரிடம் வந்தார்.
லியாண்டோ! இந்த பொருட்களை எல்லாம் உரியவர்களிடத்தில் ஒப்படைக்க வேண்டும்!
இப்போதே அதற்கு ஏற்பாடு செய்கிறேன், மாயாவி!

முரசுமூலமாக எல்லா கிராமத்துக்கும் செய்தி போயிற்று.
திருடனிடம் செல்வத்தை பறிகொடுத்தவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்!


எங்கள் கிராமத்தில் இருந்து அந்த அயோக்கியனுக்கு 4 பை தங்கம், 6 தங்கக் கோப்பை, 8 நகைகள் கொடுத்தோம்!
சரி! அவற்றை எடுத்துக்கொள்!

மாயாவி! இவன் எங்களையும் ஏமாற்றி உங்கள் பெயருக்கும் களங்கம் ஏற்படுத்திவிட்டான். இவனை என்ன செய்வது?
அவனை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!
முடியாது! நான்' உங்களுக்கு எதிராக வழக்கு தொடுப் பேன்!


நகரச் சட்டத்தின் முன் உன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?
இல்லை நெருப்புக்குள் தூக்கிப் போடும் இவர்களது தண்டனையை ஏற்றுக் கொள்கிறாயா?
அய்யோ... என்னை நகரத்திற்கே அழைத்துச் சென்றுவிடுங்கள்!

நாம் அவனை கொன்று விடுவோம்! என பயந்து விட்டான்!
அவனைக் கொல்வதுதான் முறை!
மாயாவி டாமை அழைத்துச் சென்றார்.


நகரில்— மோதிரத்தை பறிகொடுத்தவன் கையை உடைத்து கட்டுப் போட்டிருந்தார்.
என் மோதிரம் திருடுபோனதில் இருந்து கெட்டதே நடந்து வருகிறது!
பயப்படாதீர்கள்! மோதிரம் எப்படியும் கிடைத்துவிடும்!

மீன் பிடிக்கப் போனபோது—
சே... இந்த நேரத்தில்தானா தூண்டில் முறிய வேண்டும்!
அடடே... பெரிய மீனை கோட்டைவிட்டு விட்டீர்களே?


அடுத்து பூப்பந்து விளையாடியபொழுது கால் சறுக்கி கீழே விழுந்தேன்.
அதற்கு அடுத்த நாள் பூந்தொட்டி தலையில் விழுந்து பலத்த அடி...!

அடுத்து, விமான டிக்கெட்டுகளுடன் மணிப்பர்சு காணாமல் போனது. இப்படியாக தொடர்ந்து கெட்டதே நடந்து வந்தது.
விமான டிக்கெட்டையும், பர்சையும் எப்படித் தொலைத்தீர்கள்!
அதுதான் எனக்கும் புரியவில்லை!

திடீரென்று அறை மேசையில் அந்த மோதிரம் இருந்தது.
டார்லிங்! இங்கே பாரேன்! தொலைந்து போன மோதிரம் இங்கே எப்படி வந்தது!
ஆச்சரியமாக இருக்கிறதே?
மாயாவி வெளியே நின்றுகொண்டிருந்தார்.
சார்! உங்கள் டிக்கெட்டையும், பர்சையும் கீழே கிடந்து எடுத்ததாக ஒரு பெண் வந்து கொடுத்தாள்!
டார்லிங்...! பார்த்தாயா...! மோதிரம் நம்மிடம் வந்ததும் பர்சும் டிக்கெட்டும் கிடைத்துவிட்டது!
எப்படியோ இந்த மோதிரம் அதிருஷ்டத்தை கொடுத்தால் நல்லதுதான்!
(முடிந்தது)

ரூ. 6 ஆயிரம் பரிசு பெற்ற மாணவர்கள்

மாணவ – மாணவிகளுக்கு புத்தகம் – நோட்டு வாங்க உதவியாக "ராணி காமிக்ஸ்" ரூ. 6 ஆயிரம் கொடுக்க முன்வந்தது.

ஆயிரக்கணக்கான மாணவ – மாணவிகள் விண்ணப்பித்து இருந்தார்கள். அவர்கள் அனுப்பிய அஞ்சல் அட்டைகளில் இருந்து 60 பேரைத் தேர்ந்தெடுத்தோம்.

பரிசு பெற்ற அதிருஷ்டசாலி மாணவ – மாணவிகள் விவரம் வருமாறு:–

(1) சே. தீபக், மேலையூர். (2) அ. ஜெயக்குமார், தேசுமுகிப்பேட்டை. (3) மூ. இசக்கியப்பன், வள்ளியூர். (4) த. வெங்கடாசலம், கருமாபுரம். (5) சீனிவாசு, சென்னை. (6) கு. ரமேஷ், எண்ணமங்கலம். (7) பொ. பூபாலன், பேளுக்குறிச்சி. (8) சாந்தி, ஓட்டப்பிடாரம். (9) மு. பீஜான்பீவி, மதுரை. (10) சி. வீரையன், அம்மையாண்டி.

(11) சா. செல்லத்துரை, சின்னகாருகுடி. (12) நாகலெட்சுமி, இராமநாதபுரம். (13) அ. தனலட்சுமி, செஞ்சேரி. (14) ரா. சத்திய நாராயணன், சென்னை. (15) அ. சிவரஞ்சனி, ஆறுகாட்டுத்துறை. (16) ஈ. ரமனா, பள்ளபட்டி. (17) ஜெகன், மேலவாசல். (18) அனுராதா, திருநெல்வேலி. (19) லோகநாதன், திருப்பூர். (20) ராஜகோபால், அருப்புக்கோட்டை.

(21) ஜாகீர் அப்பாஸ், சூளேஸ்வரன்பட்டி. (22) கிருத்திகா, கும்பகோணம். (23) சத்தியன், சாயல்குடி. (24) பிரபாகரன், சாரம். (25) இரா. பாலசுப்பிரமணியம், கரைப்பாளையம். (26) வசந்தி, இடைப்பாடி. (27) கோ. பிரகாஷ், கூவத்தூர். (28) தேவிபாலா, பி. மருதூர். (29) ராஜேஷ்குமார், கிருஷ்ணகிரி. (30) மணிகண்டன், அரும்பார்த்தபுரம்.

(31) மு. சோலைமலை, நேமத்தான்பட்டி. (32) திலகவதி, பண்ருட்டி (33) பவானீசுவரி, கோட்டைமேடு. (34) சுரேஷ், கோவை. (35) தேவகிருபாநிதி, சென்னை. (36) பி. மோகனசுந்தரம், சங்கர் நகர்.

(37) அலிபாத்திமா, திருவிதாங்கோடு. (38) மகாமுனி, பொத்த மேட்டுப்பட்டி. (39) தி. பாலமுரளி, மரப்பாலம். (40) அனுமந்தராஜ், மூலனூர்.

(41) கவிதா, போடிநாயக்கனூர். (42) இராம. ஜெயந்தி, தேரிழந்தூர். (43) ரா. நித்தியானந்தன், ஒட்டர்பாளையம். (44) ஜோதிலட்சுமி, வாலாஜாபேட்டை. (45) தங்கராஜ், வந்தவாசி. (46) மு. வேலன், மேகலசின்னம்பள்ளி. (47) மோ. லட்சுமணகுமார், ஊத்தங்கரை. (48) சு. சிவபாலன், திருவெள்ளறை. (49) ரெஜினாமேரி, சென்னை. (50) ச. மணிவண்ணன், செம்பனார்கோவில்.

(51) வள்ளியம்மாள், தூத்துக்குடி. (52) சுல்த்தான் செய்யது இபுராகிம், அனுமந்தக்குடி. (53) பா. நெடுமாறன், பெருந்துறை. (54) ச. சந்தன்ராஜன், பாளையங்கோட்டை. (55) நூர்முகமத், காட்டுமன்னார்கோயில். (56) சை. ஷமீம் பானு, பெரும்தலையூர். (57) கீதா, திருப்பத்தூர். (58) ரா. செல்வராஜ், கடையநல்லூர். (59) திவ்யா, திருவான்குளம். (60) அ. ஜெயா, நாசரேத்.



ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம்
ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007
ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

புதிய சிறுவர்
தொடர்கதை

ராணி
காமிக்ஸ்

தவளை ராணி

அடுத்த (ஆகஸ்டு 1)
இதழில் தொடங்குகிறது!
சுவையான மாயாஜால கதை!
படிக்கத் தவறாதீர்கள்!!

தமிழா, பதில் சொல்!

தமிழா தமிழா பதில் சொல்லு
தமிழன் எனக்கே பதில் சொல்லு
தமிழா தமிழா பதில் சொல்லு...

வாய் மொழிகளிலே இனியமொழி
வாழும் மொழியில் பழையமொழி!
தாய்மொழி தன்னைப் படித்தாயா?
தமிழ்த்தேன் அள்ளிக் குடித்தாயா?
தமிழா தமிழா பதில் சொல்லு...

சேரன் சோழன் சொன்னமொழி!
பாண்டியன் வாளில் மின்னும்மொழி!
ஈரம், ஈகை சொன்னமொழி
இன்பத் தமிழைப் படித்தாயா?
தமிழா தமிழா பதில் சொல்லு...

ஆன்றோர் சான்றோர் பழகும்மொழி
அறிவை வளர்க்கும் அழகுமொழி!
மூன்று பிரிவாய் வளர்ந்தமொழி
முழுமைத் தமிழைப் படித்தாயா?
தமிழா தமிழா பதில் சொல்லு...

அவ்வைப் பாட்டி வளர்த்தமொழி
ஆற்றல் மிகுந்து தழைத்தமொழி!
செவ்வைத் தடத்தில் நடத்தும்மொழி
சீர்மைத் தமிழைப் படித்தாயா?
தமிழா தமிழா பதில் சொல்லு...

—அறிவியக் கவிஞர் சாலையார்.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS (N)/ 461
Registered as Newspaper in Sri Lanka

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்

உயிர் குடிக்கும் மாயச் சிலை

காட்டுக்குள் இருக்கும் பயங்கரச் சிலை ஒன்று மனித உயிரை குடிக்கிறது!

விறுவிறுப்பூட்டும் மர்மக் கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

ஆகஸ்டு 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை—600 007.